# புதிய இளைஞர் கொள்கை (Youth Policy) அறிமுகம் செய்யப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்புகள்... 7- ஆம் பக்கத் தொடர்ச்சி

9. அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை Hockey ஆடுகளம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தற்போது மண் ஆடுகளத்தைப் பயன்படுத்தி பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டங்களில் அதிகளவிலான திறமை வாய்ந்த Hockey விளையாட்டு வீரர் வீராங்கனைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவித்திடும் வகையில் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் செயற்கை இழை Hockey ஆடுகளம் அமைக்கப்படும்.

10. SDAT-யின்கீழ் இயங்கும் விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 2,330-லிருந்து 2,600-ஆக உயர்த்தப்படும் மற்றும் (i) உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 250-லிருந்து ரூபாய் 350-ஆகவும், (ii) சீருடை மானியத் தொகை ரூபாய் 4,000-லிருந்து ரூபாய் 6,000-ஆகவும், (iii) உபகரண மானியத் தொகை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 2,000-ஆகவும் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்கும் 37 விளையாட்டு விடுதிகளில் 20 விளையாட்டுக்களில் 2330 மாணவ மாணவியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு விடுதி மாணவ, மாணவியர்கள் பெருமளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான ஊட்ட உணவு, விளையாட்டு சீருடைகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை தரம் உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

11. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு வீரர்களின் செயல்திறனை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்திட Athlete Management System (AMS) எனும் Software செயல்படுத்தப்படும்.

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளில் நமது வீரர்கள் நூலிழையில் பெரும்பாலான வெற்றிகளைத் தவற விடுகின்றனர். எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளது திறனை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்திட Athlete Management System (AMS) செயல்படுத்தப்படும். அதிகளவிலான பதக்கங்கள் வெல்வது உறுதி செய்யப்படும்.

12. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூரில் Fencing, Badminton, Cycling, Archery மற்றும் Table Tennis ஆகிய விளையாட்டுக்களுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள SDAT டென்னிஸ் விளையாட்டரங்கில் Tennis விளையாட்டிற்கும், வேளச்சேரியில் உள்ள SDAT AGB வளாகத்தில் Swimming மற்றும் Gymnastics விளையாட்டுக்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் (Centre of Excellence) அமைக்கப்படும்.

பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களிடையே அதிகரித்து வரும் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவித்திடும் வகையில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூரில் Fencing, Badminton, Cycling, Archery மற்றும் Table Tennis ஆகிய விளையாட்டுக்களுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள SDAT டென்னிஸ் விளையாட்டரங்கில் Tennis விளையாட்டிற்கும், வேளச்சேரியில் உள்ள SDAT AGB வளாகத்தில் Swimming மற்றும் Gymnastics விளையாட்டுக்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் (Centre of Excellence) அமைக்கப்படும்.

13. சென்னை, மேயர் இராதாகிருஷ்ணன் Hockey விளையாட்டு அரங்கில் Hockey விளையாட்டிற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைப்பந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுக்களுக்கான கல்லூரி மாணவியர்களுக்கு சிறப்பு நிலை விளையாட்டு விடுதியும் (Sports Hostel of Excellence), கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவீன வசதிகள் கூடிய புதிய விளையாட்டு விடுதியும் (Sports Hostel) அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்தி வலுவான விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குவதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்கிறது. அவ்வகையில், உயர்தர பயிற்சி வழங்கிடும் வகையில் சென்னை, மேயர் இராதா கிருஷ்ணன் Hockey விளையாட்டு அரங்கில் Hockey விளையாட்டிற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைப்பந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுக்களுக்கான கல்லூரி மாணவியர்களுக்கு சிறப்பு நிலை விளையாட்டு விடுதியும் (Sports Hostel of Excellence), கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவீன வசதிகள் கூடிய புதிய விளையாட்டு விடுதியும் (Sports Hostel) அமைக்கப்படும்.

14. அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் 37 SDAT விளையாட்டு விடுதிகளுக்கு நவீன விளையாட்டு உபகரணங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் 37 SDAT விளையாட்டு விடுதிகளுக்கு பல்வேறு நிலையிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், அன்றாட பயிற்சிகள் மற்றும் பயிற்சி முகாம்களுக்குத் தேவையான நவீன விளையாட்டு உபகரணங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

15. மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் செயற்கை இழை Hockey ஆடுகளத்துடன் கூடிய முதன்மை நிலை பயிற்சி மையம் மற்றும் நவீன உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்படும்.

இந்தியாவின் முதல் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இருதடியம், மேசைப்பந்து, 8 வரிசை செயற்கை இழை தடகளப்பாதை, சைக்கிளிங் வெலோடிராம் உள்ளிட்ட பல்வேறு உலகத் தர வசதிகள் உள்ளன. இவ்வாண்டு விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

16. SDAT-ஆல் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கான மானியம் ஒலிம்பிக் விளையாட்டிற்கு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாகவும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டிற்கு ரூபாய் 15 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

மாநில விளையாட்டுச் சங்கங்களின் செயல்பாட்டினை ஊக்குவித்திடும் வகையில், மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கான மானியம் ஒலிம்பிக் விளையாட்டிற்கு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாகவும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டிற்கு ரூபாய் 15 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

17. புதிய இளைஞர் கொள்கை (Youth Policy) அறிமுகம் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் இளைஞர்கள் பெரும்பான்மையாக உள்ளதை கருத்தில் கொண்டு அவர்கள் நல்லொழுக்கத்துடன் சமூகத்திற்கு உயரிய பங்களிப்பினை அளிக்கச் செய்வதன் முக்கியத்துவத்தை கருதி, 'புதிய இளைஞர் கொள்கை' அறிமுகப்படுத்தப்படும்.

18. அனைத்து மாவட்டங்களிலும் "விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம்"- STAR அகாடமி உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் சில விளையாட்டுக்கள் மிகவும் பிரபலமாக உள்ளது. அவ்விளையாட்டுக்களில் கூடுதல் கவனம் செலுத்தும்பட்சத்தில், அப்பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும். அதனைக் கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் -STAR அகாடமி உருவாக்கப்படும்.

19. SDAT கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள் மற்றும் வெளி விளையாட்டரங்கங்களின் கட்டமைப்பு வசதிகள், மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்திடும் வகையில் மாற்றி அமைக்கப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் அனைத்து மாவட்டங்களில் உள்ள உள் மற்றும் வெளி விளையாட்டரங்கங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்திடும் வகையில் கட்டமைப்பு வசதிகள் மாற்றி அமைக்கப்படும்.

20. தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகை ரூபாய் 14 இலட்சத்திலிருந்து ரூபாய் 28 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் மற்றும் 30 எண்ணிக்கையிலான நவீன Air Rifle ரக துப்பாக்கிகள் வாங்கிடவும் நிதி உதவி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு விதமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் இவ்வாண்டு தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்படும்.

21. 2024 ஆம் ஆண்டு முதல் நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் சிறப்பு முகாம்களுக்கு ரூபாய் 50 இலட்சம் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் சமூக சேவைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளனர். ஆண்டுதோறும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய சிறப்பு செயல்பாடுகளுக்கு நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பிற்கு ரூபாய் 50 இலட்சம் தொடர் செலவினமாக வழங்கப்படும்.

22. வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (Champions Development Scheme) கீழ் ஒரு விளையாட்டு வீரருக்கு ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீரர்கள், வீராங்கனைகள் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் தொகை ஆண்டிற்கு ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

23. தலைசிறந்த பத்து விளையாட்டு வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் Expert Coaches-ஆக பணியமர்த்தப்படுவர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனையர்கள் உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்லும் உயர்ந்த நோக்கில், தலைசிறந்த பத்து விளையாட்டு வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் நிபுணத்துவ பயிற்றுநர்களாகப் பணியமர்த்தப்படுவர்.

24. சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நவீன வசதிகளுடன்கூடிய உயர் செயல்திறன் மாணவர் விடுதி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தற்போது 345 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மூன்று (விளையாட்டு விடுதி, சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை மையம்) வகையிலான தங்குமிட வசதிகளுடன்கூடிய விளையாட்டு விடுதிகளில் உள்ளனர். தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு மாணவர்கள் தங்கி பயிற்சி பெற ஏதுவாக, நவீன வசதிகளுடன்கூடிய உயர் செயல்திறன் மாணவர் விடுதி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவாகள் அறிவித்தார்.

### 'ஸ்டார்' அகாடமி உருவாக்கப்படும்

**தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் சில விளை யாட்டுக்கள் மிகவும் பிரபலமாக உள்ளது. அவ்விளையாட்டுக்களில் கூடுதல் கவனம் செலுத்தும்பட்சத்தில், அப்பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும். அதனைக் கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் –STAR அகாடமி உருவாக்கப்படும்.**

---

### பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்த உதவிடும் எம்.எல்.ஏ.க்களுக்கு நன்றி!

# ஆசிரியர் காலிப் பணியிடங்கள்: விரைவில் 2222 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்!

### சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 29-**

**தமிழ்நாட்டின் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர்கள் பணியிடங்கள் விரைவில் 2222 பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும் என, சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்தார்.**


சட்டப் பேரவை கேள்வி நேரத்தில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**டாக்டர் வை.முத்துராஜா:** புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கட்டடம் கட்டுகின்ற அந்தப் பணிகளுக்கென்று, பேராசியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின்மூலம் ரூ.7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஆயிரம் கோடி ரூபாயோடு சேர்த்து, இதுவரையில் ரூ.3,497 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறார். இதுவரை திறக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரம், வகுப்பறைகள் 3,601, ஆய்வகங்கள் 21, கழிவறைகள் 184 units, சுற்றுச்சுவர் 700மீ. கட்டப்பட்டு வருபவை வகுப்பறைகள் 3,401, ஆய்வகங்கள் 105, கழிவறைகள் 191 unit, சுற்றுச்சுவர் 2190மீ. விடுதிகள் 10, இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் விவரம், வகுப்பறைகள் 4,356, ஆய்வகங்கள் 280, கழிவறைகள் 133, சுற்றுச்சுவர் 1,100மீ. ஆக, அந்த வகையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,628 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். அதில் மொத்தம் 64 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இந்தப் பள்ளிக்கு மொத்தம் 8 வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைகள் தேவைப்படுகின்றன. இந்தப் பள்ளியில் கல்வி பயில்கின்ற மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில், நபார்டு திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**டாக்டர் வை.முத்துராஜா:** புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் இயங்கிவரும் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர ஆவன செய்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 820 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளி, இந்த கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று முதல்வர் அவர்களிடம் விருது பெற்ற பள்ளியாகும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் இப்பள்ளியில், மாணவிகளின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட பள்ளிக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களின் வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. மாணவிகளின் நலன் கருதி, கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல இந்த ஆண்டில் பள்ளிக் கல்வித் துறையில் ஏறத்தாழ 1,728 பள்ளிக்கூடங்களில், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 100க்கு 100 சதவிகிதம் High School and Higher Secondary School பெற்றிருக்கிறது. ஆக, அந்தவகையிலே இன்று சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கட்டடங்கள் இந்த ஆண்டிலே கட்டித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளைப் பார்த்தீர்களென்றால், சில பள்ளிகளில் benches and desks கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடத்திற்கு நான் ஆய்வுக்குச் சென்றபோது, அங்கே ஒரு வகுப்பறையில் கீழே அமர்ந்திருந்த பிள்ளைகளைப் பார்த்து, உடனடியாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினரிடம் எடுத்துச்சொன்னேன். சொல்லி, குறுகிய காலத்தில் உடனடியாக அந்த வகுப்பறைக்குத் தேவையான அந்த benches, desks எல்லாவற்றையுமே, அவருடைய நிதியிலிருந்து அதை வழங்கியிருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில் அவருக்கும், இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கேட்கின்ற கோரிக்கை, மிக விரைவில் இந்த ஆண்டே அது கட்டித்தரப்படும் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வை.முத்துராஜா:** புதுக்கோட்டை நகரத்தில் இயங்கிவரும் அரசு உயர், துவக்கப்பள்ளியில் 650க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தருமாறும், கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்ட பல்லவராயன்பத்தை, வளங்கொண்டான் விடுதி மற்றும் புதுக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வாராப்பூர், நகராட்சிப் பகுதிக்குட்ப காமராஜபுரம் ஆகிய பகுதிகளிலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மற்றும் கறம்பக்குடி ஒன்றியம், கரு.தெற்கு தெரு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** ஏற்கெனவே பள்ளிகளைத் தரம் உயர்த்துவது பற்றி நான் நிறைய பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய அந்த கோரிக்கைகள் எல்லாம் இன்றைக்கு நாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அது, எதுஎதெல்லாம் விதிக்கு உட்பட்டு வருகிறதோ, அதையெல்லாம் கண்டிப்பாக எங்களுடைய அலுவலர்களோடு உட்கார்ந்து பேசி, அந்த கருத்துருவைப் பெற்று, எதெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்கின்ற பணிகளில் எங்களை நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம்.

அதேபோன்று அவர் கேட்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றும் படிப்படியாக இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு எல்லாவிதத்திலும் நாங்கள் வழிவகை செய்வோம். அவர் கேட்டிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு ஆங்காங்கே தற்காலிக ஆசிரியர்களை வைத்திருக்கிறோம் என்று சொன்னாலும், நீங்கள் ஏற்கெனவே பார்த்தீர்களென்றால், BT teachers ஆசிரியர்கள் 2222 பேர் தேர்வை முடித்துவிட்டு, certificate verification-ல் இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள் அதுவும் நிறைவு செய்யப்பட்டு, எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ அவை நிரப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவையில் விவாதம் நடைபெற்றது.

---

### திட்டங்களைத் தொடங்கியவர்கள் பெயரைச் சூட்டுவது மரபென்ற வகையில்

# காலை உணவுத் திட்டத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயரையே சூட்டலாம்!

### 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 29-


திட்டங்களை தொடங்கியவர்கள் பெயரை சூட்டுவது மரபென்ற வகையில் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் கொண்டு வந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பெயரையே அத்திட்டத்திற்கு சூட்டலாம் என 'தினத்தந்தி' நாளேடு 28.6.2024 அன்று தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

மானியக்கோரிக்கைகளுக்கான தமிழக சட்டசபை கூட்டம் நடந்துவருகிறது. வழக்கமாக ஏறத்தாழ ஒரு மாதம் நடக்கும் இந்த கூட்டத்தொடரை விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வருவதால் தினமும் காலையும். மாலையும் என 4 நாட்களில் முடிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். நேரம் குறைவு என்றாலும் அமைச்சர்கள் வெளியிடும் அறிவிப்புகளுக்கு பஞ்சமில்லாமல் இருக்கிறது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தனது மானியக்கோரிக்கை மீது அளித்த பதிலுரையில் அரசியல் குடும்பத்தில் பிறந்தவருடைய பாரம்பரிய திறமையை பளிச்சிட்டிருக்கிறார்.

அவரது தாத்தா அன்பில் தர்மலிங்கம் அண்ணா, கலைஞரின் அன்பையும். நம்பிக்கைக்குரியவராகவும் திகழ்ந்த பழம்பெரும் தலைவர். கலைஞரின் அமைச்சரவையில் 1975க்கு முன் அமைச்சராக இருந்தவர். அவரது தந்தை பொய்யாமொழி முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலினின் உற்ற நண்பரான சட்டமன்ற உறுப்பினர். அன்பில் மகேஷ் பொய்யாமொழி. அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் ஆருயிர் நண்பர். ஆக கலைஞர் குடும்பத்தோடு நெருங்கிய உறவு கொண்டுள்ள அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக்கல்வி மானியக் கோரிக்கைக்கு இப்போது 4வது முறையாக பதிலளித்தார்.

அப்போது அவர் புதிய அறிவிப்புகளை மட்டுமல்லாமல், ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்புகளையும், தான் நிறைவேற்றிய சாதனைகளையும் குறிப்பிட்டுள்ளார். கடந்த 3 ஆண்டுகளில் பள்ளிக்கல்வி அமைச்சர் என்ற முறையில் அவரிடம் 2,6:11 கோப்புகள் வந்திருக்கின்றன என்றும்,




அந்த கோப்புகள் அத்தனையிலும் கையெழுத்திட்டு ஒரு கோப்பும் நிலுவையில் இல்லை என்பதையும் சட்டமன்றத்தில் பதிவு செய்துள்ளார். அதுபோல இதுவரை சட்டமன்றத்தில் 158 அறிவிப்புகள் வெளியிட்டதாகவும், அதில் 143 அறிவிப்புகளை செயல்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டு. மீதம் இருக்கின்ற 1.5 அறிவிப்புகளையும் விரைவில் செய்துகாட்டுவோம் என்று உறுதியளித்த அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித்துறை சார்பில் இதுவரை 67க்கும் மேற்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த ஆண்டு மானியக்கோரிக்கையில் 25 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அவர் சட்டசபையில் ஒரு வேண்டுகோளையும் விடுத்துள்ளார். முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்துள்ள காலை உணவுத்திட்டம் மூலமாக 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் 18 லட்சத்து 53 ஆயிரம் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இப்போது சமூகநலத்துறை மூலமாக சுவைமிகு காலை உணவு வழங்கப்படுகிறது. இந்த திட்டம் இந்த ஆண்டு முதல் ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள அரசு நிதியுதவி பெறும் பள்ளிக்கூடங்களுக்கும் விரிவுபடுத்தப் படுகிறது. இந்த காலை உணவுத்திட்டத்துக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத் திட்டம் என்ற பெயரை வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுக்க உறுப்பினர்கள் மேஜையை தட்டியதால் அவையே அதிர்ந்தது.

இந்த கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். முதல்-அமைச்சரின் சிந்தையில் உதித்து, அவர் செயல்படுத்திய இந்த திட்டத்துக்கு அவர் பெயரை வைப்பதே சாலப்பொருத்தமாகும். சத்துணவுத்திட்டத்தை கொண்டுவந்த எம்.ஜி. ஆரின் பெயரைக்கொண்டுதான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டு இன்றும் அந்த பெயரிலேயே இயங்குகிறது. ஏற்கனவே மனிதநேய மையம் சார்பில் மலிவு விலை உணவகம் நடத்திய சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி, தான் பதவியேற்றவுடன் அதுபோல மலிவு விலை உணவகத்தை "அம்மா உணவகம்` என்ற பெயரில் கொண்டு வந்தார். ஜெயலலிதா பெயரிலான இந்த அறிவிப்பை வெளியிட்டபோது தி.மு.க.வினர் எதிர்க்கவில்லை. எனவே தொடங்கியவர்கள் பெயரை சூட்டுவது மரபு என்ற வகையில், மாணவர்களுக்கு காலை உணவுத்திட்டம் கொண்டு வந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெயரையே அந்த திட்டத்துக்கு சூட்டலாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.